மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2019ம் வருடம் அக்டோபர் திங்கள் 14ஆம் நாள் திங்கட்கிழமை

**I.A . No. 110/2019**

**in**

**O.S. No. 111/2018**

R. ஜெகநாதன்

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. R. உலகநாதன்
2. உதவி மின் பொறியாளர், TNEB அலுவலகம், சோழவந்தான்.
3. வட்டாட்சியர், வாடிப்பட்டி.

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 26.03.2019ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.I. முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.M. தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. R. ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், கடந்த 01.10.2019ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இம்மனு, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9ன்படி, தாவா சொத்து மூலம் கடந்த 20.06.2008ம் தேதியிட்ட பாகவிஸ்திய பத்திரப்படி 1ம் எதிர்மனுதாரரின் "B" செட்டியூல் பாக சொத்திற்கும் மனுதாரரின் "C" செட்டியூல் பாக சொத்திற்கும் பொதுவாக தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வரும் அமைப்பை பற்றியும் கிணற்றின் அமைப்பை பற்றியும் ஏற்கனவே அவர்களது தகப்பனார் ராமு தாவா சொத்து மூலம் செய்து வந்துள்ள தண்ணீர் பாசனம் பற்றி விபரங்களையும், தாவா சொத்தின் Physical Features பார்வையிட்டு குறித்து அதன் மூலம் நீதிமன்றத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய Advocate/Court Commissioner நியமிக்க உத்தரவு பிறப்பிக்கக் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கமும் அதன் பேரிலான மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதமும்:</u>**

தாவா சொத்து கிணறு மூலம் தான் கடந்த 20.06.2008ம் தேதியன்று ஏற்படுத்திக்கொண்ட பாகவிஸ்தி பத்திரப்படி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்குரிய "B" செட்டியூல் சொத்தில் 4வது இலக்க சொத்திற்கும் அதாவது ரீசர்வே எண். 52/1Bக்கும் மனுதாரர்/வாதிக்குரிய "C"செட்டியூல் சொத்தில் 5வது இலக்க சொத்திற்கும், அதாவது ரீசர்வே எண். 52/1Cக்கும் பொதுவானது தாவா சொத்திற்குரிய ரீசர்வே எண். 52/1A கிணறும் நிலமும், மனுதாரர்/வாதிக்கும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கும் சரிபாதி பாத்தியமுறையில் தண்ணீர் பாய்ச்சி அதன்மூலம் இன்றுவரை விவசாயம் செய்து வருகிறார்கள் என்பதை பற்றியும் தாவா சொத்து மூலம் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் அவரவர் பாகச்சொத்திற்கு தண்ணீர் பாய்ச்சி வந்து கொண்டிருக்கிற அமைப்பை பற்றியும் தாவா சொத்தின் கிணற்றின் அமைப்பை பற்றியும், மேற்படி பாகவிஸ்தி பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்பு அவர்களது தகப்பனார் ராமு என்பவர் தாவா சொத்து மூலம் ஏற்கனவே தண்ணீர் பாய்ச்சி வந்துள்ள அமைப்பை பற்றியும் தெரிந்து கொள்வதற்கும், தாவா சொத்தின் Physical Feature இவ்வழக்கிற்கு மிகவும் முக்கியமானது என்பதால், தாவா சொத்தை வழக்கறிஞர்/நீதிமன்ற ஆணையாளர் மூலம் Physical Features குறித்து Advocate /Commissioner நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டியது அவசியம் என்றும், இல்லாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்பதால், இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டப்பட்டது.

**<u>2)1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கமும் அதன் பேரிலான எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதமும்:</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல என்றும், 20.06.2008ம் தேதியிட்ட பதிவு பாகவிஸ்திப் பத்திரத்தில் தாவா கிணறு முழுவதும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றே உள்ளது. மேலும் மனுதாரர்/வாதி மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் தகப்பனாரான ராமு அவர்கள் பாகவிஸ்திப்பத்திரம் ஏற்படுவதற்கு முன்பே காலமாகிவிட்டநிலையில், அவர் தண்ணீர் பாய்ச்சி அனுபவித்து வந்த அமைப்புகளைப்பற்றி தெரிந்துகொள்ள நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோருவது வேடிக்கையானது என்றும், உண்மையில் கடந்த 20.06.2008ம் தேதி பதிவு பாகப்பத்திரத்தில் கண்ட "பி" செடியூல் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும், "சி"செடியூலில் கண்ட சொத்துக்களை மனுதாரர்/வாதியும் அவரவர் தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்த நிலையில், மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட "சி"செடியூலில் கண்ட 5ம் லக்க சொத்திற்கு தண்ணீர்

வசதி இல்லாததால், மனுதாரர்/வாதி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை அணுகி மேற்படி 4லக்க சொத்திலிருந்து தண்ணீர் கொடுத்தால், மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட "சி" செடியூலில் கண்ட 5ம் லக்க சொத்தில் உள்ள தென்னை மரங்களில் 10 தென்னை மரங்களின் மேல்மகசூல்களை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எடுத்துக்கொள்ள சம்மதித்து தண்ணீர் கேட்டபோது, 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் சம்மதித்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தாமல் வாக்கறாலாக பேசி முடிவு செய்து கொண்டனர் என்றும், அதன்படி மனுதாரர்/வாதி "சி"செடியூலில் கண்ட 5ம் லக்க சொத்திற்கு, 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட "பி"செடியூலில் கண்ட 4ம் லக்க சொத்திலிருந்து தண்ணீர் மட்டும் பாய்ச்சி விவசாயம் செய்து வந்த நிலையில், மனுதாரர்/வாதி 4ம் லக்க சொத்து முழுவதையும் குறைந்த விலைக்கு கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்டபோது 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரமறுத்துவிட்டதால், வீண் குரோதம் கொண்ட மனுதாரர்/வாதி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியுடன் பிரச்சினை செய்து "நீ இந்த நிலத்தில் எப்படி விவசாயம் செய்கிறாய் என்று பார்த்துவிடுகிறேன்" என்று வர்மித்து, உன் மீது கேஸ் போட்டு கோர்ட்டுக்கு அலையவைத்து, இந்த சொத்தை எனக்கே கிரையம் கொடுக்க வைக்கிறேன் பார் என்று வர்மித்து பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து தாவா வழக்கை தாக்கல் செய்து, தற்போது அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் கடந்த 20.06.2008ம் தேதியிட்ட பதிவு பாகப்பத்திரத்தின்படி மனுதாரர்/வாதிக்கும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பாகமதிப்பு தலா ரூ.15,00,000/- என்று மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் மற்றும் அவர்களின் தாயார் அமிர்தம் ஆகியோரும் சம்மதித்து கையொப்பம் செய்து கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணத்தில் "6வது பக்கத்தில் ஒரு நபர் அடையும் சொத்தைப்பொறுத்து மற்ற நபர்களுக்கு எவ்வித பாத்தியமும், சம்பந்தமும், பின்தொடர்ச்சியும், உரிமையும் கிடையாது என்று உறுதிகூறுகிறோம்." என்று ஷரத்துக்கண்டு, சம்மதித்து மேற்படி பதிவு பாகப்பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ளனர் என்றும், மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் "பி" செடியூல் கண்ட 4ம் லக்க சொத்தில் ரீசர்வே எண். 52/1B,52/1Aல் கண்ட சொத்தினை தன் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தனது அனுபவத்தில் வைத்து அனுபவித்து வரும் நிலையில், 20.06.2008ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தில் தாவா சொத்து மனுதாரர்/வாதியின் பாகத்தில் எழுதாமல் விட்டு விட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி பாகத்தில் முழுவதுமாக எழுதப்பட்டதாகவும், அதனை சரிசெய்யும் விதமாக அன்றைய தினமே தாவா சொத்து சரிபாதியாக பிரிவின்றி பொதுவாய் வைத்து பயன்படுத்திக்கொள்ள சம்மதப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாகவும் கூறுவது பொய்யானதாகும் என்றும், அவ்வாறான எந்தவொரு சம்மதப்பத்திரமும் ஏற்படுத்தி, 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் கையொப்பம் செய்யப்படவில்லை என்றும், எனவே வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் உண்மை விபரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள இம்மனுவை எடுத்த எடுப்பிலே தள்ளுபடி செய்யும்படி

வேண்டப்பட்டது.

2,3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவிற்கு எதிர்உரை இல்லை என மேல் எழுத்து செய்யப்பட்டுள்ளது.

**தீர்வு:-**

3) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்து 20.06.2008ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரப்படி 1ம் எதிர்மனுதாரரின் "பி" செடியூல் பாக சொத்து மற்றும் மனுதாரரின் "சி" செடியூல் பாக சொத்திற்கும் பொதுவாக தண்ணீர் பாய்ச்சும் அமைப்பை பற்றி தெரிந்து கொள்ளும் பொருட்டு நீதிமன்ற ஆணையாளர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 20.06.2008ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரப்படி, அவரவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் அடைந்து கொள்வது என்றும் ஒரு நபர் அடையும் சொத்தைப்பொறுத்து மற்ற நபர்களுக்கு எவ்வித பாத்தியமும், சம்பந்தமும், பின்தொடர்ச்சியும், உரிமையும் கிடையாது என்று உறுதிகூறி மேற்படி பாகவிஸ்தி பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றும், அதற்கு புறம்பாக தாக்கல் செய்யப்பட்ட இம்மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும் வாதுரைக்கப்பட்டது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 20.06.2008ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரத்தில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட "சி" செடியூலில் கட்டுப்பட்ட 5ம் லக்க சொத்திற்கு தண்ணீர் வசதி இல்லாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட "பி" செடியூலில் கண்ட 4ம் லக்க சொத்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வது என்றும், அதற்கு மாற்றாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 5ம் லக்க சொத்திலுள்ள தென்னை மரங்களில் மேல் மகசூல்களை 1ம் எதிர்மனுதாரர் எடுத்துக்கொள்வது என்றும் சம்மதித்து அதன் பேரில் 1ம் எதிர்மனுதாரர் அனுமதியின் பேரில் மட்டுமே தண்ணீர் விடப்பட்டது என்றும் மற்றபடி மனுவில் குறிப்பிட்டது போல் மனுதாரர் உரிமை கோருவதற்கு எவ்வித அருகதையும் கிடையாது என்றும் வாதுரைக்கப்பட்டது.

5) இரு தரப்பு வாதுரைகளின்படி வழக்கு கோப்புகளை பரிசீனை செய்ததில் தாவா சொத்தாக பிராது சொத்து விபரத்தில், **"ரீசர்வே எண். 52/1A நிர் 0.1.00 ஏர்ஸ்க்கு 2.47 செண்டுக்கு கட்டுப்பட்ட நிலமும் அதிலுள்ள கிணறு 5 ரீ மின் மோட்டார் தண்ணீர் தகல செட் ரூம், பம்பு செட்டு மின் இணைப்பு எண். SC 158-013-212 அதனுடன் மேற்படி கிணற்றுக்கு போகும் 10 அடி அகலப்பாதை உள்படவும் தாவா சொத்து"** என

குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வழக்கு பரிகாரமாக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் மனுதாரர்/வாதியால் கோரப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தாகிய சர்வே எண். 52/1Aல் கட்டுப்பட்ட 10 அடி அகல பாதை மற்றும் அதிலுள்ள கிணறு மற்றும் மின் மோட்டார் மற்றும் தண்ணீர் பாய்ச்சும் உரிமை ஆகியவற்றின் அனுபவத்தை தெளிவுப்படுத்தும் பொருட்டு நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையை பெறுவது அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி 20.06.2008ம் தேதியிட்ட பாகவிஸ்தி பத்திரம் எழுதப்பட்ட தேதியிலேயே மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கிடையே மேற்படி தாவா சொத்து தொடர்பாக சம்மத பத்திரம் எழுதிக்கொள்ளப்பட்டதாக மனுதாரர் தரப்பில் வாதுரைக்கப்பட்டு, வழக்குரையுடன் மேற்படி சம்மத பத்திரம் 2வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், **"ரீசர்வே 52/1A நிரில் சேர்ந்த 0.01.0 ஏர்ஸ்க்கு செண்டு 2 உள்ள நிலத்தில் உள்ள கட்டப்பட்ட தகர செட், கிணறு மற்றும் பம்புசெட் மின்இணைப்பும் இவைகளில் நாமிருவரும் பொதுவாய் வைத்து பயன்படுத்திக்கொள்ள வேண்டியதென்றும், மேற்படிநிலத்திலுள்ள நான்கு தென்னை மரத்தை நம்மில் 1வது நபர் தனித்து பயன்படுத்தி அனுபவித்துக்கொள்ள வேண்டியதென்றும்,"** எனக்குறிப்பிடப்பட்டுள்ளது அதே போல் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட 26.05.2009ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஈடுகடன் பத்திரத்தில் மனுதாரரால் தாவா சொத்து பற்றி குறிப்பிடும்போது, **"மேற்படி சொத்து சர்வே 52/1A,52/1Bநிர்களில் கட்டுப்பட்ட கிணறு S.VC. No. 21 நிர் மிண் மோட்டார் 5 HP பம்பு செட், தகர செட் மோட்டார் பம்பு மேற்படி கிணற்றுக்கு போகும் 10 அடி அகல பாதை மேற்படி மோட்டாரை கிணற்றுகள் ஏற்றி இறக்கும் கிரேன் போன்றவைகளில் எனக்குரிய பொதுவில் பிரிவின்றி பேர்பாதி பாத்திய உரிமையும் சேர்த்து"** என பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட 5வது ஆவணமாகிய 30.07.2010ம் தேதியிட்ட மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் சேர்த்து கூட்டாக லெட்சுமி என்ற விஜயலெட்சுமிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட ஈடுகடன் பத்திரத்தில் சொத்து விபரம் பற்றி குறிப்பிடும் போது, **"தாவா சொத்தான ரீசர்வே எண். 52/1 கண்ட மேற்படி 1,2 இலக்க சொத்துகளில் உள்ள அனைத்து தென்னை மரங்களும் மேற்படி சொத்தில் உள்ளதும், 1வது நபருக்கும் 2வது நபருக்கும் சமபாகமான கிணறு மின் மோட்டார் தண்ணீர் ரூம் வகையறா முழு பாத்தியமும் சேர்த்து தங்களுக்கு ஈடுபாத்தியம்"** என்று குறிப்பிட்டு பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவண எண். 6 ஆகிய 05.12.2012ம் தேதியிட்டு மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கிடையே ஏற்படுத்தப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரத்திலும்**"இதனடியில் கண்ட நிலத்தையும் அதிலுள்ள தென்னை மரங்கள் வகையறாவையும் கிணர், மின்மோட்டார் தண்ணீர் பாத்தியத்தில் பிரிவினையில்லாத பேர்பாதி பாகத்தையும் சேர்த்து இந்த ஒப்பந்தப்பத்திரம் மூலம் 2வது நபருக்கு 1வது நபர் அனுபவ உரிமையை விட்டுக்கொடுத்துள்ளதால்"** எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்குரையுடன் தாக்கல்

செய்யப்பட்ட ஆவணங்களின் தாவா சொத்தான சர்வே எண். 52/1Aல் கட்டுப்பட்ட கிணறு, மின்மோட்டார் மற்றும் அது தொடர்பான 10 அடி அகல பாதை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையே உடன்பாடு ஏற்பட்டு அதன்படி இரு தரப்பினரும் செயல்பட்டு வந்துள்ளதாக தெரிய வருகிறது. மேற்படி விபரங்களை 1ம் எதிர்மனுதாரர் முழுமையாக மறுத்துள்ள நிலையில் மேற்படி ஆவணங்களின் ஏற்கும் தன்மை மற்றும் அனுமதிக்கக்கூடிய தன்மையை முழுமையான சாட்சிய விசாரணையின் மூலமே தீர்மானம் செய்ய இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் மேற்படி உரிமை தொடர்பான பரிசீலனையை ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்வு காண இயலாது என்பதால் தாவா சொத்தான நிலத்தில் தற்சமயம் எத்தகைய அமைப்பில் உள்ளது என்பதையும், எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெளிவு படுத்திக்கொள்வதற்கும், தாவா சொத்து தொடர்பாக வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முழுமையாகவும், தெளிவாகவும் தீர்மானம் செய்வதற்கும் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்வது அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களில் உள்ள ஷரத்துக்களை மறுத்துள்ள போதிலும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு மாற்றாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தென்னை மரங்களின் மேல்பலன்களை அனுபவம் செய்வதற்கு வாய்க்காரலாக உடன்பாடு ஏற்பட்டதாக எதிர்உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தில் உள்ள தண்ணீர் பயன்பாடு மனுதாரரால் பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை உறுதி செய்வதற்கும், தாவா சொத்து தொடர்பான இயற்கை சொருபங்களை அறிந்து கொள்வதற்கும் நீதிமன்ற ஆணையாளர் அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதகிறது.

மேற்கண்ட பொருண்மை மற்றும் சட்டநிலைப்பாடுகளின்படி இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு.N.சக்திவேல் அவர்களை இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையாளராக இந்நீதிமன்றம் நியமனம் செய்கிறது. அவர் மனுவில் குறிப்பிட்ட தாவா சொத்து மூலம் செய்து வந்துள்ள தண்ணீர் பாசனம் பற்றி விபரங்களையும், தாவா சொத்தின் Physical Features பார்வையிட்டு சர்வேயர் உதவியுடன் அதற்கான வரைபடத்துடன் கூடிய ஆய்வு அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

நீதிமன்ற ஆணையாளர் ஊதியமாக ரூ.5000/-த்தை மனுதாரர்/வாதி நேரடியாக இவ்வுத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து 7 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையாளரிடம் செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையாளர் தாவா இடத்தை இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து, சர்வேயர் உதவியுடன் புலத்தணிக்கை செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை 30 தினங்களுக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா நாள்: 14.11.2019

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2019ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//